Shri P R Perumal, MD&CEO, ITCOT participated in the Discussion on Construction of Residential accommodation for migrant workers at Tiruppur Exporters' Association (TEA) on 22.07.2021. Smt. R. Gajalakshmi IAS, MD, TANSIDCO, Shri Raja M. Shanmugham, President, Shri S. Somasundaram, Joint Secretary, Tiruppur Exporters' Association and Executive Committee members of TEA participated in the discussion.

உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவு சங்க பருத்தி ஏலத்தில், 491 மூட்டை வந்தது. ஆர்.சி.எச்., ரகம், 6,500 – ...கம், 2,000 – 3,000 ரூபாய் வரை விற்கப்பட்டது. 96 விவசாயிகள், ஏழு வியாபாரிகள் பங்கேற்றனர்.

32°C 24°C வானம் அதிக மேக மூட்டத்துடன் காணப்படும்

# கனவு நனவாகும் தருணம்!

- பனியன் தொழிலாளருக்கு குடியிருப்பு வசதி
- அதிகாரிகள் குழுவினர் விரிவான ஆலோசனை



பனியன் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவது தொடர்பான ஆலோசனை கூட்டம், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க அலுவலகத்தில் நேற்று நடந்தது.

திருப்பூர், ஜூலை 23– பின்னலாடை தொழிலாளருக்கு குடியிருப்பு வசதி ஏற்படுத்துவது குறித்து, 'சிப்காட்' மற்றும் 'இட்காட்' இயக்குனர்கள், திருப்பூர் ஏற்றுமதியாளர்களிடம் நேற்று, ஆலோசனை நடத்திச் சென்றுள்ளனர்.

திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க தலைவர் ராஜாசண்முகம், இணைச்செயலாளர் செந்தில்குமார் ஆகியோர், கடந்த 8ம் தேதி முதல் மூன்று நாட்கள் சென்னையில் முகாமிட்டனர்.

ஜவுளித்துறை அமைச்சர் காந்தி, தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் ஜவுளி, தொழில் துறை, நிதித்துறை செயலர்களை நேரில் சந்தித்து, தொழில் வளர்ச்சிக்கான தேவைகள் குறித்த கோரிக்கைகளை முன்வைத்தனர். தொழிலாளர் வசதிக்காக, திருப்பூரில் குடியிருப்பு வீடுகள் கட்டவேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

தொழில்துறையினரின் இந்த கோரிக்கைக்கு, தமிழக அரசு செவிசாய்த்துள்ளது. அதன்படி, 'சிப்காட்' இயக்குனர் கஜலட்சுமி, 'இட்காட்' இயக்குனர் பெருமாள் ஆகியோர் நேற்று திருப்பூர் வந்தனர். அப்பாச்சி நகரில் உள்ள ஏற்றுமதியாளர் சங்க அரங்கில், சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடினர்.

ஏற்றுமதியாளர் சங்க தலைவர் ராஜாசண்முகம், இணைச்செயலாளர் சோமசுந்தரம், சங்க உள்கட்டமைப்பு மேம்பாட்டு குழு தலைவர் ராமசாமி, துணை தலைவர் நவமணி பங்கேற்றனர். அதில், பனியன் தொழிலாளர் தங்கும் விடுதி, குடியிருப்பு கட்டுவது குறித்து, ஆலோசனை நடத்தப்பட்டது.

## முதலீடு செய்ய வேண்டும்!

ஏற்றுமதியாளர் சங்க தலைவர் ராஜாசண்முகம் கூறியதாவது:

தங்கும் விடுதிக்கு பதில், அதிகளவில் குடியிருப்பு வீடுகளை ஏற்படுத்துவதன் மூலம், தொழிலாளர் குடும்பத்துடன் தங்கி, பணிபுரியமுடியும். ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒன்றுக்கும் மேற்பட்டோர் பணிபுரிவதால், தொழிலாளர்களின் பொருளாதாரமும் மேம்படும். பின்னலாடை துறை சந்தித்துவரும் தொழிலாளர் பற்றாக்குறை பிரச்னையும் விலகிவிடும்.

இதுகுறித்து, அதிகாரிகளிடம் தெரிவித்தோம். ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டனர். பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், திருப்பூரில் தொழிலாளர் குடியிருப்பு ஏற்படுத்துவது குறித்து அரசுக்கு அறிக்கை தயாரித்து அளிக்க உள்ளதாக, உறுதி அளித்துச்சென்றுள்ளனர்.

பின்னலாடை துறை வசம், போதுமான அளவு இயந்திர சக்தி உள்ளது. இயந்திரங்களை முழுமையாக இயக்குவதற்கு, தொழிலாளர் சக்தி அதிகம் தேவைப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, ஆடை உற்பத்தி நிறுவனங்கள், தொழிலாளர் குடியிருப்பு ஏற்படுத்துவதற்காக முதலீடுகள் செய்ய வேண்டும்.

இதனால், தொழிலாளர் இடம்பெயர்தல் தவிர்க்கப்படும். தொழிலாளர் பற்றாக்குறை விலகுவதன் மூலம், நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள் முழு இயக்கத்துக்கு வரும்.

இவ்வாறு, அவர்கூறினார்.

இரண்டாம் தவணை தடுப்பூசிக்கு காத்திருப்பு


- பனியன் தொழிலாளருக்கு குடியிருப்பு வசதி
- அதிகாரிகள் குழுவினர் விரிவான ஆலோசனை





பனியன் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவது தொடர்பான ஆலோசனை கூட்டம், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க அலுவலகத்தில் நேற்று நடந்தது.

...பட்டது. தொழில்துறையினரின் இந்த கோரிக்கைக்கு, தமிழக அரசு செவிசாய்த்துள்ளது. அதன்படி, 'சிப்காட்'

கலந்துரையாடினர். ஏற்றுமதியாளர் சங்க தலைவர் ராஜாசண்முகம், இணைச்செயலாளர் சோமசுந்தரம், சங்க உள்

நடத்தப்பட்டது. முதலீடு செய்ய வேண்டும்! ஏற்றுமதியாளர் சங்க தலைவர் ராஜாசண்முகம்

குடும்பத்தை சேர்ந்த ஒன்றுக்கும் மேற்பட்டோர் பணிபுரிவதால், தொழிலாளர்களின் பொருளாதாரமும் மேம்படும்.